**பியகம பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பியகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த பெறுமதி, சொத்துக்களின் தன்மை மற்றும் ஆயட்காலம் என்பவற்றின் பிரகாரம் அது நிலையான சொத்தொன்றாக இனங்காணப்படாமல் மிகவும் சிறிய பெறுமதி மற்றும் மீண்டும் விற்பனை செய்து பணமாக்க முடியாத குறுகிய ஆயட்காலத்துடனான விடயங்கள் நிலையான சொத்துக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 70,604 தொகையான முத்திரைக் கட்டணச் செலவினம் முற்கொடுப்பனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்கில் ரூபா 10,000 தொகையான முன்பள்ளிப் பாடசாலைச் செலவினத்தைச் செய்யும் போது பொது வைப்புக் கணக்கில் இருதடவை வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய பட்டதாரி சம்பள மீளளிப்பு ரூபா 20,000 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏனைய நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 8,698,145 தொகை சபையின் கடன்கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) சபை நிதியத்தின் கீழ் 09 நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 2,952,573 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

இரண்டு கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கும், பயன்பாட்டுப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரமான மீதிகளுக்கும் இடையே ரூபா 616,277 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,859,814 தொகையான நிலுவையாக இருந்த ஏனைய வருமான மீதியில் நிலுவையாக இருந்த கைத்தொழில் வரி ரூபா 2,046,730 தொகை, நிலுவை வியாபார அனுமதிப்பத்திரபத்திரம் ரூபா 1,321,566 தொகை, நிலுவை வியாபார நிலைய வாடகை ரூபா 6,472,769 தொகை மற்றும் நிலுவை வாடகை ரூபா 4,012,748 ஆக இருந்ததுடன் இந்த மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகொல உப அலுவலகத்தில் விளம்பர அறிவித்தல் நிலுவை மீதி ரூபா 552,752 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

பட்டோலைகள் மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 204,830,300 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 | ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையாவது மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கடவத்த |

| | |
|---|---|
| ஆம் இலக்க கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான சுற்றறிக்கை | உப அலுவலகத்திற்குரிய பொதுச் சந்தையின் சந்தை வளவில் 65 விற்பனைக் கடைகள் தொடர்பான இறுதியாக கடை வாடகை 2008 ஆம் ஆண்டின் போதே மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 94,521,293 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 87,204,422 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) சபைக்குச் சொந்தமான பணம் ரூபா 41.3 மில்லியன் தொகை வருடாந்தம் முதிர்வடையும் நான்கு நிலையான வைப்புக்களிலும் மும்மாதத்தில் முதிர்வடையும் ஒரு நிலையான வைப்பிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2015 சனவரி வங்கிக்கூற்றின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்யப்படாத ரூபா 64,732 பெறுமதியான 03 காசோலைகள் 2017 திசெம்பர் வரையும் வங்கி இணக்கக்கூற்றில் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 77,265,163 | 84,112,658 | 87,248,731 | 39,325,980 | 74,793,025 | 85,298,336 | 97,111,116 | 42,085,803 |
| வாடகை | 5,058,860 | 4,788,946 | 4,667,968 | 10,485,518 | 4,110,000 | 4,543,531 | 3,969,701 | 10,364,539 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,062,000 | 1,120,183 | 1,149,184 | 1,321,566 | 1,500,000 | 877,754 | 925,204 | 1,350,566 |
| ஏனைய வருமானம் | 233,943,600 | - | 200,343,001 | - | 213,002,800 | - | 232,243,000 | - |

**2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 51,333,972 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 1 - 5 வருடங்களுக்கு இடையே | 5 -10 வருடங்களுக்கு இடையே | 10 வருடங்களுக்கு மேல் | ஒட்டுமொத்த நிலுவை வருமானம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 25,185,427 | 17,520,364 | 1,859,565 | 44,565,356 |
| கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி | - | - | 772,200 | 772,200 |
| வியாபார நிலைய வாடகை | 56,900 | 4,321,222 | 1,501,544 | 5,879,666 |
| குத்தகை வாடகை | - | 116,750 | - | 116,750 |
| | | | | 51,333,972 |

**2.3.3 வீதவரியும் வரியும்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 19,047,301 தொகையான வருமானம் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டதுடன், ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை 799 இனால் அதிகரித்திருந்தது. ஒட்டுமொத்த நிலுவை வருமானமான ரூபா 51 மில்லியனில் 86 சதவீதம் நிலுவை ஆதனவரியாகும். இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

(அ) கடவத்த உப அலுவலகத்தில் ‘‘சீ’’ கட்டிடத்தில் அமைந்துள்ள கடைகளுக்காக 2003 இன் புதிய மதிப்பீட்டின் பின்னர் கடை உரிமையாளர்களால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதியான ரூபா 3,979,342 தொகையை கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடவத்த உப அலுவலகத்திற்குரிய 04 மீன் கடைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 598,210 ஆகக் காணப்பட்டது.

(இ) கடவத்த உப அலுவலகத்தின் A கட்டிடத்தின் 09 விற்பனைக் கடைகளில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 86,150 ஆக இருந்ததுடன் வேறு நபர்கள் இந்த விற்பனைக் கடையினை நடாத்திச் செல்கின்றமையால் பழைய நிலுவையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடவத்த உப அலுவலகத்தில் 5 - 10 வருடங்கள் வரை நிலுவைக் கடை வாடகை மீதி ரூபா 192,300 ஆக இருந்ததுடன் இந்தக் கடைகள் நீண்ட காலமாக மூடப்பட்டிருந்தது.

(உ) பொது சந்தையில் A கட்டிடத்தில் 2018 மே 15 ஆந் திகதிய பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது இலக்கம் 04, 18, 19, 20, 21, 24, 26, 27, 30, 31 மற்றும் 41 என்ற கடைகள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

(ஊ) கடவத்த உப அலுவலகத்திற்குரிய 77 கடைகள் 05 வருடங்களுக்கு முன்பிருந்து உடன்படிக்கை செய்யப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

### 2.3.5 ஏனைய வருமானம்

**(அ) அறிவித்தல் பதாதை**

(i) 2017 இன் வருடாந்த பாதீட்டின் பிரகாரம் ஆண்டின் போது கடவத்த மற்றும் மாக்பொல உப அலுவலகங்களின் அதிகாரப் பிரதேசத்தில் இருந்து அறவிடுவதற்கு இலக்கிடப்பட்ட தொகை ரூபா 240,000 ஆக இருந்ததுடன் அறவிடப்பட்ட தொகை ரூபா 131,500 ஆகும்.

(ii) அறிவித்தல் பதாதை பதிவேட்டில் பெயர், திகதி, தொகை பற்றுச் சீட்டு இலக்கம், பெயர்ப் பதாதை காட்சிப்படுத்துகின்ற இடம், இடத்தின் எல்லை என்பவற்றை உள்ளடக்கிய முறையான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/16 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் தொடர்பான உப விதிகளின் பிரகாரம் விளம்பர அறிவித்தல் பதாதைகள் 70 இற்காக ரூபா 552,752 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தொலைத்தொடர்பு கோபுரம்**

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 தொலைபேசிக் கோபுரங்களில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை மீதியான ரூபா 112,941 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெல்கொட உப அலுவலகத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்தில் 32 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் இருந்த போதிலும் அவை தொடர்பான மெய்மையாய்வொன்றைச் செய்து தொலைத்தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. தொலைத்தொடர்புக் கோபுரத்தை அமைக்கும் போது ஒரு கோபுரத்திலிருந்து வியாபார வரி ஆகக் குறைந்தது ரூபா 3,000 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும், இந்த தொகை அறவிடப்படாமையின் காரணமாக சபைக்கு அறவிடக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,715,693 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 08 விடயங்களுக்காக மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 08 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) எதிர்பார்த்த அடைவு மட்டம் பெறப்படாமை

செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 15,000,000 தொகையான பணிகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 7,000,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த அடைவு மட்டம் பெறப்பட்டிருக்கவில்லை.

#### (ஈ) ஆரம்பிக்கப்படாத இலக்குகள்

2017 ஆம் ஆண்டில் பல்வேறு மூலங்களின் கீழ் கிடைத்த ரூபா 7,720,197 பெறுமதியான 15 செயல்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

#### (உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பியகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28,51,499 தொகை செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 61.1 சதுர கிலோமீற்றரை உடைய பியகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளொன்றுக்கு சேகரிக்கப்படுகின்ற 45 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் உக்கும், உக்காத வகையில் வகைப்படுத்தப்பட்டு பெறப்பட்டிருந்த போதும் நெல்கொட தளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ii) கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு 01 கழிவுப்பொருள் டிப்பர் வாகனத்திற்காக ரூபா 11,900 செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் சபை ஊழியர்களினால் தெல்கொடையில் அமைந்துள்ள கழிவுப்பொருள் மாற்றல் நிலையத்திற்கு சேகரிக்கப்படுகின்ற

கழிவுகள் JCB இயந்திரம் மூலம் டிப்பர் வாகனங்களுக்கு ஏற்றுவதற்காக சபையினால் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 422,122 ஆகும். உடன்படிக்கையின் பிரகாரம் இந்த செலவினம் உரிய நிறுவனத்தினால் செலவிடப்பட வேண்டிய செலவினமாக இருந்தது.

(iii) கழிவுப் பொருள் தளத்தில் பேணப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 19,718,300 தொகை உரிய தனியார்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதும் அகற்றப்படுகின்ற கழிவுகளின் அளவு தொடர்பான விபரம் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iv) தெல்கொட கழிவுப்பொருள் மாற்றல் நிலையத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) 2016 மார்ச் 16 ஆந் திகதி முதல் 2017 மார்ச் 15 ஆந் திகதி வரை இறுதியாக அகற்றுவதற்காக வழங்கப்பட்ட நிறுவனத்திற்கே 2017 மார்ச் 15 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்திற்கும் பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக குழுத் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 07 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

**பொது வைப்புக் கணக்கு**

(அ) பொது வைப்புக் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய சகல பதிவுகளும் உள்ளடக்கப்படாமை மற்றும் நானாவித வைப்புக் கணக்கு சமப்படுத்தப்படாமை போன்றவற்றின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 27,519,237 தொகையான மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் வைப்பு மீதி 30,797,925 ஆக இருந்தது. இந்த மீதியில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 5,232,932 தொகையும், 05 வருடங்களுக்கு மேல் ரூபா 12,581,580 தொகையும் காணப்பட்டன.

(இ) நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத 02 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 17,814,512 ஆகும்.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை | மிகை ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 03 | 03 | - | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - | - |
| இரண்டாம் நிலை | 56 | 53 | 05 | 02 |
| ஆரம்ப நிலை | 134 | 125 | 09 | - |
| மொத்தம் | 194 | 182 | 14 | 02 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஐந்து வருமானப் பரிசோதகர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 04 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டது.

(ii) 08 உத்தியோகத்தர்கள் அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நிரந்தர பதவிகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுத்தப்படாமல் வேறு கடைமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(iii) ஓய்வூதிய உரித்தற்ற சபை ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு பணத்தை அரச சேவை ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை தொழில்தருனர் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புக்களின் கூட்டுமொத்தமான ரூபா 239,590 தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### (ஆ) ஊழியர் கடன்

(i) பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலை நீக்கஞ் செய்யப்பட்ட ஊழியர்களிடமிருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 42,014 தொகையும் தொழிலை விட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 66,428 தொகையும் காணப்பட்டன.

(ii) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி 11 ஊழியர்களிடமிருந்து சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிடுவதற்குள்ள தொகை ரூபா 177,685 ஆகும்.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

### ஆதனவரி மதிப்பீடு காலரீதியில் இடம்பெறாமை

1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வருவித்து செய்து கொள்ள வேண்டியிருந்த போதிலும், இறுதித் தடவையாக ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்ட 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்காகவும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

29 மயான நிலங்கள் மற்றும் 14 சனசமூக மண்டபங்கள் சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அவற்றை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2018 மே 17 ஆந் திகதி வரையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்த முடியாததாக துருப்பிடிக்கும் நிலையில் உள்ள 04 வாகனங்கள் காணப்பட்டன.

### 3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) காணியும் கட்டிடமும் மற்றும் மோட்டார் வாகனம் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 43,624 பெறுமதியான 214 புத்தகங்கள் காணாமல் போயிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட 18 விடயங்களின் கீழ் ரூபா 641,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கங்கள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமை மற்றும் 36 செலவின விடயங்களில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்தமை என்பவற்றின் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் சேவையில் இருந்த போதும், போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெறாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு ஐயவினா எதுவும் விநியோகப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. 2017 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்குகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | (i) சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாமை. |
| | (ii) பௌதீக ரீதியில் காணப்படாத சொத்துக்களை கணக்குகளிலிருந்து அகற்றாமை |
| | (iii) சொத்துக்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்துவதற்கு உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை பெற்றுக்கொள்ளப்படாமை |
| | (iv) நிலையான சொத்துக்களை கணக்கு வைக்கும் கொள்கையொன்று ஏற்படுத்தப்படாமை |
| | (v) பொருட் பதிவேடு பேணப்படாமை. |
| | (vi) வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்படாமை |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | முறையான பிரகாரம் மதிப்பீடு மற்றும் உடன்படிக்கை தயாரிக்கப்படாமை |